## 100 நாள் வேலைத்திட்டத்தை அழிக்கத் துடிக்கும் நாசகார ஒன்றிய பா.ஜ.க. அரசு –

# ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்து கூட்டணிக் கட்சியினர் கடலெனத் திரண்ட காட்சி!



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மதுரை மாநகர் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பாக அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி நூறுநாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் வகையில் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் அதற்கு ஒத்துஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் முனிச்சாலையில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் சண்முகம் கழக மாநில உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பொன். முத்துராமலிங்கம், தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, தெற்கு சட்டமன்ற உறுப்பினர் பூமிநாதன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் சிறப்புரை யாற்றினார். இதில் தி.மு.க. கூட்டணி கட்சி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும் சட்டத்தைக் கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் சார்பில் திண்டுக்கல் கிழக்கு மாவட்டம் திண்டுக்கல் வடக்கு ஒன்றியம் சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் பெ.செந்தில்குமார் கண்டன உரையாற்றினார். உடன் ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட துணைச் செயலாளர் பிலால் உசேன், மாநகரச் செயலாளர் ராஜப்பா உள்பட மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கிராமப்புற பெண்கள் திரளாக கலந்து கொண்டனர்.




தேனி வடக்கு மாவட்டம் மேற்கு ஒன்றியம் கிழக்கு ஒன்றியம் ஏற்பாட்டில் சிலமரத்துப்பட்டி ஊராட்சியில் 100 நாள் வேலை இனி இல்லை அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஜால்ரா அடிக்கும் அ.தி.மு.க. வையும் கண்டித்து வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மேற்கு ஒன்றியச் செயலாளர் லட்சுமணன், கிழக்கு ஒன்றிய செயலாளர் அய்யப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மற்றும் போடி தொகுதி பார்வையாளர் நேரு, பாண்டியன், நகரச் செயலாளர் புருஷோத்தமன், பேரூர் செயலாளர்கள் செல்வம், கவியரசு மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவு துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனையின்படி மதுரை கிழக்கு தொகுதி ஒத்தக்கடையில் நூறு நாள் வேலை வேலைத்திட்டத்தை ஒழிக்கும் வகையில் சட்டத்தைக் கொண்டு வந்த பாசிச ஒன்றிய பா.ஜ.க. அரசைச் கண்டித்தும், அதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வைக் கண்டித்தும் ஒன்றியச் செயலாளர் அ.பா.ரகுபதி தலைமையில் கிழக்கு வடக்கு ஒன்றியச் செயலாளர் மதிவாணன் முன்னிலையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் கல்யாண தியேட்டர் அருகில் அண்ணல் காந்தியடிகளின் பெயரை நீக்கி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க.அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நெல்லை மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல்,அம்பை ஒன்றியச் செயலாளர் பரணி சேகர், அம்பை நகரச் செயலாளர் பிரபாகரன், வி.கே.புரம். நகரச் செயலாளர் கணேசன், வழக்கறிஞரணி அமைப்பாளர் செல்வ சூடாமணி, துணை அமைப்பாளர் மாடசாமி உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் பலர் உள்ளனர். கூட்ட நிறைவில் மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் கண்டன உரையாற்றி தமிழ்நாடு போராடும் தமிழ்நாடு வெல்லும் என்று கூறி நிறைவு செய்தார்.



தேனி தெற்கு மாவட்டம் சின்னமனூர் ஒன்றியம் சார்பில் ஒன்றியச் செயலாளர் அண்ணாதுரை ஏற்பாட்டில்100 நாள் வேலை இனி இல்லை அண்ணல் காந்தியடிகள் பெயரை நீக்கி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஜால்ரா அடிக்கும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தெற்கு தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் இணைந்து நடை பெற்றது. இதில். நகரச் செயலாளர் முத்துக்குமார், மாவட்ட துணைச்செயலாளர் செந்தில், மாநில சீர்மரபினர் நலவாரிய உறுப்பினர் தங்க ராஜ், மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கீம் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கழக தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின் படியும், தலைமைக்கழக அறிவிப்பின்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 ஊராட்சி ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகள் சார்பில் 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் அ.தி.மு.க.வையும் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



நெல்லை மாவட்டம் முக்கூடல் காந்தி திடலில்,100 நாள் வேலை திட்டத்தில் மகாத்மா காந்தி பெயர் நீக்கம் உள்ளிட்ட மக்கள் விரோத ஒன்றிய அரசின் செயலைக் கண்டித்து கழக மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கணேஷ் குமார் ஆதித்தன் தலைமையில், பாப்பாக்குடி யூனியன் சார்பில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி பங்கேற்ற மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றியச் செயலாளர் மாரிவண்ண முத்து வரவேற்புரையாற்றினார். பேரூர் செயலாளர் இலட்சுமணன், சிபிஎம் மாரிச்செல்வம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி லாரன்ஸ், சி.பி.ஐ. ஆதிமூலம், தி.மு. கழகத்தைச் சேர்ந்த அனைத்து நிர்வாகிகளும் பங்கேற்று ஒன்றிய அரசுக்கு எதிராக கண்டன முழக்கமிட்டனர்.